# வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் 2015

# 2015/01

**இடம்** : வட மாகாண சபையின் குழுக் கூட்ட அறை

**காலம்** :- 09.03.2015 காலை 09.30 மணி

**சமுகமளித்தோர்:-**

- கௌரவ கல்வி அமைச்சர் திரு.த.குருகுலராசா
- கௌரவ திரு.சி.தவராசா – எதிர்க்கட்சித் தலைவர், வடக்கு மாகாண சபை.
- கௌரவ திரு.ம.அன்ரனி ஜெயநாதன் – பிரதி அவைத் தலைவர், வட மாகாண சபை.
- கௌரவ திரு.இ.இந்திரராஜா – வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- கௌரவ திரு.பா.கஜதீபன் – வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- கௌரவ திரு.ஆ.சி.து.ரவிகரன் – வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- கௌரவ திரு.வே.சிவயோகன் – வடக்கு மாகாண சபை உறுப்பினர்
- கௌரவ திரு.ப.அரியரத்தினம் – வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- கௌரவ திரு.ஜி.ரி.லிங்கநாதன் – வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- கௌரவ.திரு.ம.தியாகராசா – வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- கௌரவ.திரு.ஆ.டோன் தர்மபால செனவிரட்ன – வடக்கு மாகாண சபை உறுப்பினர்.
- திரு.ஏ.சி.முஸாதிக் – கௌரவ H.M.றயீஸ் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அவர்களின் இணைப்புச் செயலாளர்
- திரு.சி.சத்தியசீலன் – செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- திரு.ஆ.இராஜேந்திரன் – மாகாணக் கல்விப் பணிப்பாளர், வட மாகாணம்.
- திருமதி.உஷா சுபலிங்கம் – பணிப்பாளர், கலாசார பண்பாட்டுத் திணைக்களம்.
- திரு.ராஜா ரணசிங்க – பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்.
- திரு.ஆ.க.சண்முகநாதன் – கல்வி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர்.
- திரு.மா.தேவேந்திரன் – பிரதிக் கல்விப் பணிப்பாளர்(நிர்வாகம்), மா.க.அமைச்சு
- திரு.எம்.பிறின்ஸ் லம்பேட் – விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் காலை வணக்கத்தினை தெரிவித்து கூட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். சென்ற கூட்ட அறிக்கையிலிருந்து எழும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

➢ **மு/குமுழமுனை மகா வித்தியாலய உயர்தர விஞ்ஞானப்பிரிவு ஆரம்பிப்பது தொடர்பானது.**

மு/குமுழமுனை மகா வித்தியாலயத்தில் உயர்தர விஞ்ஞானப்பிரிவு ஆரம்பிப்பது தொடர்பாக கொள்கை அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. வசதி வரும்பொழுது ஆரம்பிக்கப்படும்.

➢ **தொண்டமானாற்றுக்கு குறுக்கே பாலம் அமைப்பது தொடர்பானது.**

தொண்டமனாற்றுக்கு குறுக்கே தண்ணீர் பாய்ந்தோடக் கூடியவாறு நிரந்தரமான பாலம் அமைத்தல் வேண்டும். இது தொடர்பாக விவசாய, நீர்பாசன அமைச்சருக்கு கோரிக்கைக் கடிதம் அனுப்புதல் வேண்டும்.

- **விளையாட்டு உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு தொடர்பானது.**

  விளையாட்டு உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 12.03.2015 ஆந் திகதி பதவியுயர்வுப் பரீட்சை நடைபெறவுள்ளதனால் அதன் பின்னர் நேர்முகத் தேர்வு நடாத்தப்பட்டு பதவி உயர்வு வழங்கி வெற்றிடங்கள் நிரப்புதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

- **விளையாட்டு உத்தியோகத்தர் திரு.ப.ஆனந்தராஜாவை ஆளுநர் செயலகத்திலிருந்து விடுவிப்பது தொடர்பானது.**

  விளையாட்டு உத்தியோகத்தர் திரு.ப.ஆனந்தராஜா விளையாட்டு திணைக்களத்தில் அறிக்கையிட்டுள்ளார்.

- **பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவிற்கு ஆண்,பெண் பிள்ளைகளை இணைத்து ஒரு பிரிவை மாத்திரம் ஆரம்பித்தல் தொடர்பானது.**

  ஆரம்பப் பிரிவை ஆரம்பிப்பது தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

- **யா/ஒஸ்மானியா கல்லூரி அதிபர் நியமனம் தொடர்பானது.**

  யா/ஒஸ்மானியாக் கல்லூரிக்கு பொருத்தமான அதிபரை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

- **வவுனியா வடக்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த 34 அதிபர்களது பதவியில் உறுதிப்படுத்தல் தொடர்பானது.**

  பதவியில் உறுதிப்படுத்தல் தொடர்பாக கல்வி அமைச்சு, இசுறுபாயாவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- **அதிபர் சேவை இடமாற்றம் தொடர்பானது.**

  அதிபர் இடமாற்றம் தொடர்பாக பொருத்தமானவர்களை பொருத்தமான பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்தல் வேண்டும். பதவியுயர்வு கிடைத்த பின்னர் பொருத்தமானவர்களை 1 AB பாடசாலைகளுக்கு நியமித்தல் வேண்டும். ஏழு வருடங்களை பூர்த்தி செய்தவர்களையும் பதவியுயர்வு கிடைக்கப் பெற்றவர்களையும் வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடமாற்ற சபையால் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு அதன் மூலம் இடமாற்றம் செய்யப்படுவர். 1 AB பாடசாலைகளுக்கு அதிபர்களை இடமாற்றம் செய்யும் போது தகுதியானவர்களையே இடமாற்றம் செய்யப்பட வேண்டும். விண்ணப்பங்கள் கோரப்படும் போது நிபந்தனைகளை குறிப்பிட்டு விளம்பரப்படுத்தப்படல் வேண்டும்.

- **தீவக கல்வி வலயத்தில் சேவைக் காலத்தை முடித்தவர்களின் இடமாற்றம் தொடர்பானது.**

  தேசிய கல்வியற் கல்லூரியில் பயிற்சியினை நிறைவு செய்தவர்களை நியமனம் செய்யும் போது சேவைக் காலத்தினை நிறைவு செய்த ஆசிரியர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- **பதுளை மாவட்ட கொஸ்லாந்தை மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி வழங்கல் தொடர்பானது.**

  பதுளை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் விபரங்கள் கோரப்பட்ட பொழுது ஒன்பது மாணவர்களின் பெயர் விபரங்கள் பிரதேச செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவ் விபரங்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினால் ஒரு குழு நேரில் சென்று பாதிக்கப்பட்டவர்களிற்கு பணத்தினை வழங்கல்.

- **தொண்டர் ஆசிரிய நியமனம் தொடர்பானது.**

  தொண்டராசிரியர் நியமனம் தொடர்பில் தற்போது 643 பேர் உள்ளனர். ஆனால் "A" பட்டியலில் 2013 ஆம் ஆண்டில் நியமனம் வழங்கப்பட்ட பொழுது விடுபட்ட ஆசிரியர்கள் 31 பேரும் "B" பட்டியலில் 2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் தொண்டராசிரியராக இணைந்த சேர்ந்த 160 பேரும் "C" பட்டியலில் 2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் தொண்டராசிரியராக இணைந்த 452 பேரும் உள்ளனர். மேற்படி தொண்டராசிரியர்களில் "A", "B" பட்டியலில் உள்ள 191 பேருக்கு முன்னுரிமை அடிப்படையில் நியமனம் கிடைக்க ஆவன செய்தல் வேண்டும். பாடசாலைகளில் தொண்டராசிரியர்களை இணைத்துக் கொள்வதனை நிறுத்தும்படி பாடசாலை அதிபர்களிற்கு அறிவுறுத்தல் வழங்கப்படல் வேண்டும். ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர்கள் 177 பேரையும் பகுதி நேர ஆசிரியர்கள் 87 பேரையும் ஆசிரிய உதவியாளராக மாற்றுவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

- **வ/விபுலானந்த கல்லூரி அதிபர் திரு.கந்தையா தனபாலசிங்கம் SLPS – I அவர் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பானது**

  மேற்படி அதிபருக்கெதிராக விசாரணைக் குழு தொடர் நடவடிக்கை எடுத்துள்ளது. ஆரம்ப விசாரணை அறிக்கையை பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்புதல் வேண்டும். காலம் கடந்த விசாரணையாக இருப்பதனாலும் கௌரவ மாகாணசபை உறுப்பினருடன் தொடர்புபட்டிருப்பதனாலும் உடனடியாக இவரை வவுனியா தெற்கு வலயத்திற்கு இணைப்புச் செய்து விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதுவரையில் பாடசாலையினை பிரதி அதிபரிடம் பொறுப்புக் கொடுக்கப்படும்.

- **மு/கருநாட்டுக்கேணி அ.த.க. பாடசாலைக்கு அதிகஷ்டப் பிரதேசப் படி பெறுதல் தொடர்பானது.**

  மேற்படி பாடசாலை மாணவர்களிற்கு காலணி வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.ஆ.சி.து.ரவிகரன் அவர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டது. கஷ்டப் பிரதேச பாடசாலைப் படி பெறும் பாடசாலைகள் மூன்று வருடங்களிற்கு ஒரு முறை மீளாய்வு செய்யும் போது இப் பாடசாலையும் கவனத்தில் எடுக்கப்படும்.

- **யா/கதீஜா பெண்கள் கல்லூரியை மீள ஆரம்பித்தல் தொடர்பானது.**

  யா/கதீஜா பெண்கள் கல்லூரி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

- **பழைமை வாய்ந்த பாடசாலைக் கட்டடங்களை திருத்துதல் தொடர்பானது.**

  பழமை வாய்ந்த கட்டடங்களை பாதுகாத்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

- **துனுக்காய் வலய சேவைக்கால பயிற்சி வகுப்பு தொடர்பானது.**

  துனுக்காய் வலய சேவைக் காலப் பயிற்சி வகுப்பு தொடர்பாக விசாரணை அறிக்கை எடுக்கப்பட்டுள்ளது.அது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

- **பாடசாலை நேரத்தில் தனியார் கல்வி நிலையங்களிற்கு செல்வதனை தடை செய்தல் தொடர்பானது.**

  பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலை நேரத்தில் தனியார் கல்வி நிலையத்திற்கு செல்வதனை தடை செய்தல் வேண்டும். இதற்கு பாடசாலை அதிபர் பொறுப்பேற்றல் வேண்டும்.

## கலாசாரம் தொடர்பானது

- **நல்லூர் மந்திரிமனை தொடர்பாக எமது பழைமையை பேணிப் பாதுகாத்தல் தொடர்பானது.**

  நல்லூர் மந்திரி மனையை பாதுகாத்தல் தொடர்பாக மாகாண சபை அவைத் தலைவருடன் கலந்து பேசி நீண்ட கால குத்தகை அடிப்படையில் வடக்கு மாகாண சபை எடுத்தல் வேண்டும். ஏற்கனவே தீர்மானத்தின் படி சட்டநாதர் கோவில் நிர்வாகத்துடன் கலந்துரையாடி குத்தகை அடிப்படையில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- **பண்பாட்டுப் பெருவிழா விருது வழங்கல் தொடர்பானது.**

  பண்பாட்டுப் பெருவிழா விருது வழங்கல் தொடர்பில் பத்திரிகை வாயிலாக விளம்பரப்படுத்தி ஒவ்வொரு பிரதேச செயலகத்திலிருந்தும் மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டு இறுதியாக அவர்களில் இருந்து 25 பேர் தெரிவு செய்யப்படுவார்கள். நேர்முகத் தேர்வுக் குழுவில் பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர், மாகாண சபை உறுப்பினர், கலாசார பேரவை உறுப்பினர் ஆகியோர்கள் இணைந்த ஐந்து பேர் கொண்ட உறுப்பினர்கள் உள்ளடங்குவார்கள்.மற்றைய கலைஞர்கள் பிரதேச கலாசார விழாவில் கௌரவிக்கப்பட வேண்டும்.

## விளையாட்டுத்துறை தொடர்பானது

- வர்ண இரவு விழா தொடர்பானது.

  வர்ண இரவு விழா அன்று விளையாட்டு உத்தியோகத்தர் திரு.சதீஸ்கண்ணா அவர்களது திடீர் மரணம் காரணமாக அவ் விழாவினை பிற்போட முடியாத காரணத்தினால் அவ் விழாவினை அவ் உத்தியோகத்தருக்கு சமர்ப்பணம் செய்ததாக கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். அடுத்த வர்ண இரவு தொடர்பான பதிப்பில் அவ் உத்தியோகத்தரை கௌரவித்து அவரது புகைப்படம் பிரசுரித்து நினைவு கூரப்படும் என்றார்.

# 09.03.2015 ஆந் திகதிய கூட்டத் தீர்மானங்கள்

- **ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான தற்போதைய நிலைமை**

  வருடாந்த இடமாற்றத்தில் 148 பேர் உரிய சேவைக் காலத்தினை பூர்த்தி செய்து யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற தகுதி பெறுகின்றனர். மேற்படி ஆசிரியர்களிற்கு 07.04.2015 முதல் செயற்படும்வண்ணம் இடமாற்ற அனுமதியினை வழங்கி இன்று (09.03.2015) முதல் கடிதம் வழங்கப்படும். நியமனக் கடிதத்தில் 10 வருடம், 08 வருடம் சேவைக் காலத்தை பூர்த்தி செய்ய வேண்டியவர்களிற்கு சேவைக் காலத்தினை 06 வருடமாக குறைத்த காரணத்தினால் 62 பேர் 06 வருட நிபந்தனையை பூர்த்தி செய்துள்ளர். நியமனம் பெற்ற வலயத்தில் உரிய சேவைக் காலத்தினை பூர்த்தி செய்யாத 53 ஆசிரியர்கள் இரண்டாம் தவணை முதல் மீளவும் தமது சொந்த வலயங்களிற்கு திருப்பி அனுப்பப்படுவார்கள். 2015 ஆம் ஆண்டு பதிலீட்டு அடிப்படையில் யாழ் மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களிற்கு இடமாற்றம் வழங்கப்பட்ட 208 ஆசிரியர்களில் 100 ஆசிரியர்கள் கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர். மேன்முறையீடு காரணமாக 47 ஆசிரியர்களின் இடமாற்றம் நிராகரிக்கப்பட்டுள்ளது. மிகுதி 61 ஆசிரியர்களும் இதுவரை கடமையைப் பொறுப்பேற்கவில்லை. கல்வி ஆலோசனைக் குழுவின் தீர்மானத்தின்படி 61 ஆசிரியர்களதும் சம்பளத்தினை இடைநிறுத்தும்படி அறிவுறுத்தப்பட்டது. இந்த இடமாற்றத்தின் போது மனிதாபிமான ரீதியில் பெண் ஆசிரியர்களுக்கும் குழந்தைகள் உள்ளவர்களுக்கும் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் வசதியான வலயங்களும் பாடசாலைகளும் வழங்கப்படும்.

- இலங்கை அதிபர் சேவை தரம் I ஐச் சேர்ந்தவர்கள் வட மாகாணத்திலுள்ள 1 AB, 1 C பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவர்களது விண்ணப்பம் கருத்தில் கொள்ளப்படும்.

- குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஒரே பாடசாலையில் 7 வருடங்கள் பூர்த்தி செய்த ஆசிரியர்களை மே 1 முதல் இடமாற்றம் பெறும் வண்ணம் பாடசாலை விடுமுறை காலத்தில் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் கூட்டத்தை கூட்டி செயற்படுத்த வேண்டும்.

- **தரம் -01, தரம் - 06 மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுமதித்தல்.**

  தரம் -01, தரம் -06 மாணவர் அனுமதி தொடர்பாக ஆலோசனைக் குழு ஒன்றை ஆரம்பித்து நடவடிக்கை எடுத்தல்.

- **வ/வவுனியா தமிழ் ம.ம.வி. அதிபர் நியமனம், மாணவர் பிரச்சினைகள்**

  வ/வவுனியா தமிழ் ம.ம.வி. தொடர்பாக தற்போதைய அதிபருடன் கலந்துரையாடி தீர்வு காணல். இது தொடர்பான கலந்துரையாடல் 20.03.2015 அன்று காலை 9.00 – 11.30 மணி வரை இடம்பெறும்.

- தேசிய பாடசாலைகளிலிருந்து மேலதிக ஆசிரியர்களை விடுவித்தல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.

- **மு/முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலையை பெண்கள் வித்தியாலயமாக்குதல்.**

  மு/முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலையை பெண்கள் வித்தியாலயமாக்குதல் தொடர்பாக கூட்டம் ஒன்றினை கூட்டுதல்.

- **கிளி/செல்வாநகர் அ.த.க. பாடசாலையில் தரம் – 06 ஐ ஆரம்பித்தல்.**

  கிளி/செல்வாநகர் அ.த.க. பாடசாலையில் தரம் – 06 ஐ ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படுகின்றது.

- **வலிகாமம் பிரதேசத்தில் கழிவு எண்ணெய் கலப்பதால் சூழல் மாசடைதல்**

  கழிவு எண்ணெய் சம்பந்தமான கூட்டம் இன்று (09.03.2015) பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறுகின்றது.

- **ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் செயலாளர் யார்? ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஒரு செயலாளரை நியமித்தல்.**

  பாராளுமன்ற சட்டத்தின்படி ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு ஒரு செயலாளரை நியமித்தல் வேண்டும். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

- கிளி/ஸ்கந்தபுரம் இல 1 அ.த.க. பாடசாலைக்கும் மைதானத்திற்கும் இடையில் வேலி ஒன்றினை அமைத்துக் கொடுத்தல். பிற்பகலில் அம் மைதானத்தினை கிராம மக்களும் பயன்படுத்த அனுமதித்தல்.

- வவுனியா வடக்கு வலய நெடுங்கேணிக் கோட்டத்தினை நெடுங்கேணியில் இயங்க வைக்க நடவடிக்கை எடுத்தல். இக் கோட்டக் கல்வி அலுவலகத்திற்காக வைத்தியசாலைக் கட்டடங்களைக் கோருதல்.

- வ/கோவில் குளம் இந்துக் கல்லூரி மைதான சுற்று மதில் அமைக்க அனுமதி வழங்கப்படுகின்றது.

## பாடசாலை தரமுயர்த்தல்

- **வ/வவுனியா கோவில் குஞ்சுக்குளம் அ.த.க. பாடசாலை தரம் 10 ஆரம்பித்தல்.**

  வ/கோவில் குஞ்சுக் குளம் அ.த.க. பாடசாலையில் தரம் 10 ஆரம்பித்தல் தொடர்பாக கட்டமைப்புக் குழு மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

- **வ/இராசேந்திரம்குளம் பாடசாலையை தரம் – II இற்கு உயர்த்துதல்.**

  வ/இராசேந்திரம்குளம் பாடசாலையை தரம் – II இற்கு தரமுயர்த்த அனுமதியளிக்கப்படுகின்றது.

- **மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம் – பாடசாலையின் வளத்தை மேம்படுத்தல்.**

  ஏனைய அயல் பாடசாலை மாணவர்களை (தரம 06 – 11 வரை) அனுமதிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- **மன்/வேப்பங்குளம் அ.மு.க. பாடசாலை – உயர்தர கலைப்பிரிவினை ஆரம்பித்தல்.**

  உயர்தரக் கலைப்பிரிவினை ஆரம்பிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

- **மு/முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலை**

  கௌரவ அமைச்சரின் தலைமையில் கூட்டம் ஒன்றை நடாத்துதல்.வலயக் கல்விப் பணிப்பாளர் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

- **யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.**

  மேற்படி பிரதேசத்திற்கு அண்மையில் I AB பாடசாலைகள் இருப்பதனால் மாணவர்களை அப் பாடசாலைகளில் சேர்க்கலாம். இப் பாடசாலையை சிறந்த தரம் – II பாடசாலையாக உருவாக்க முயற்சி செய்யலாம்.

- **யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஆரம்பப் பாடசாலை**

  யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் ஆரம்பப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## வேறு விடயங்கள்

- **வ/காமினி மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ள காரணத்தினால் சத்தம் பாடசாலைக்கு பெரும் இடைஞ்சலாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது– கௌரவ.திரு.ஆ.டோன் தர்மபால செனவிரட்ன – வடக்கு மாகாண சபை உறுப்பினர்.**

  ஒலித் தடை (Sound Barrier) ஒன்றினை பாடசாலைக்கும் பேருந்து நிலையத்திற்கும் இடையில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- மாகாணக் கொடியை சகல பாடசாலைகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு பாடசாலையிலும் நடைபெறும் வைபவங்களில் கொடி ஏற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும்.
- மகரகம ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இருந்து ஆசிரியர்களது பரீட்சைப் பெறுபேற்றினை உறுதிப்படுத்தி எடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்டாரவன்னியன் சிலையை வைப்பதற்கு கலாசார உதவிப் பணிப்பாளரால் வாரியப் பத்திரம் தயாரித்தல் வேண்டும்.
- ஒரு ஆசிரியர் மாத்திரம் உள்ள பாடசாலைகளுக்கு இன்னொரு ஆசிரியரை நியமித்தல்.
- முல்லைத்தீவு மாவட்டத்தில் கலாசார மண்டபம் இல்லாத காரணத்தினால் கலாசார மண்டபம் ஒன்றினை அமைத்துத் தருமாறு கலாசார உதவிப் பணிப்பாளரால் கோரிக்கை விடப்பட்டது.
- இந்தியப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களிடம் 100 ஆங்கில, தகவல் தொழில்நுட்ப, விஞ்ஞான, கணித ஆசிரியர்களை கோருதல்.

கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.ஜி.ரி.லிங்கநாதன் அவர்களினால் இக் குழு சமூக அக்கறை கொண்டு செயற்படுவதனால் கல்வி ஆலோசனைக் குழுவிற்கு நன்றி தெரிவித்தார்.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்களின் நன்றியுடன் கூட்டம் பிற்பகல் 01.15 மணியளவில் இனிதே நிறைவு பெற்றது.

சி. சத்தியசீலன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு
வடமாகாணம்
யாழ்ப்பாணம்

சி.சத்தியசீலன்
செயலாளர்.